**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் கொடுக்கல் வாங்கல் தொர்டர்பான அறிக்கை 2022**

---

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன (திருத்தப்பட்ட) சட்டத்தின் 6 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் தாபனத்தின் செயற்படுநிலை தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

தாபனத்தால் இறுதியாக தயாரித்த 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 6,458,394,856 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,592,315,521 |
| **மொத்த சொத்துக்கள்** | **11,050,710,377** |

| | |
|---|---|
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| ---------------------------------------------------------------------- | |
| உரிமை மூலதனம் | (2,941,269,573) |
| பொறுப்புக்கள் | |
| ------------------------ | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 8,310,536,743 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 5,681,443,207 |
| | ----------------- |
| **மொத்த பொறுப்புக்கள்** | **11,050,710,377** |
| | =========== |
| மொத்த வருமானம் | 433,018,066 |
| மொத்த செலவினம் | 1,051,993,321 |
| | ----------------- |
| **மிகை / (பற்றாக்குறை)** | **(618,975,255)** |
| | ========== |

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீண்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 879,289,082 ஆன பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கோ அல்லது அவ்வாறான பெறவேண்டிய மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 113(3)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சதொச நிறுவனத்தின் நிதி முகாமையாளரின் அலுவலகத்தில் உள்ளடங்கிய கட்டிடத்தில் தீ ஏற்பட்டமை, 2004 ஆம் ஆண்டில் தொண்டர் இழப்பு முறைமையின் கீழ் ஊழியர்கள் விலகியமை மற்றும் காணப்பட்ட கணனி முறைமையில் உரிய அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக மீதியினை இனங்காண்பதற்குத் தேவையான ஆவணங்கள் தாபனத்திடம் காணப்படாதிருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. நிதிப் பிரமாணம் 113(3)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பப்படுகின்றது. | நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 113(3)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுமதி ரூபா 2,922,023,966 ஆன நீண்டகாலமாக செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் போது வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கோ அல்லது அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா சதொச கம்பனியில் இருந்தும் நெல் சந்தைப்படுத்தும் சபையில் இருந்தும் அறவிட வேண்டிய பணம் முறையே ரூபா 2,151,533,978 மற்றும் ரூபா 94,059,338 ஆக இருந்ததுடன் தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கும், நெல் சந்தைப்படுத்தல் சபைக்கும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 89,228,614 மற்றும் ரூபா 966,666,192 ஆக இருந்தது. இந்த அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் பல வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதுடன் அது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து அந்த மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது செலுத்துவதற்கோ தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகள் சரியாக இருந்தமை நிதிக் கூற்றுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (ஈ) | தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிச செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு ரூபா 436,164,234 பெறுமதியான அரிசி இருப்புக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2018 திசெம்பர் 31 | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பைப் பெற்று ரூபா 118,011,334 தொகை மோசடி செய்தமை, மதிப்பிழந்த காசோலைகள் வழங்கியமை மற்றும் போலியான வங்கி | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும் போது அறவிடும் இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக இருந்த ரூபா 118,011,334 தொகையை தீர்த்துவைப்பதற்காக வழங்கப்பட்ட சகல காசோலைகளும் மதிப்பிழந்திருந்தது. தாபனத்தால் கடன் அடிப்படையில் அரிசி பெற்றுக் கொள்ளும் போது ரூபா 100,000,000 ஆன 02 வங்கி பிணைகள் பெறப்பபட்டிருந்ததுடன் அந்த பிணைமுறிகள் உள்ளபடியான ஆவணமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் கம்பனியால் தொடர்ச்சியாக கடன் செலுத்தாதிருக்கும் போதும் கம்பனிக்கு தொடர்ச்சியாக அரிசி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வங்கி பிணைமுறியும் பிழையான ஆவணமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தப் பணத்தை செலுத்தாது புறக்கணித்தமையால் தாபனத்தால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்பட்டது. | பிணைமுறி வழங்கியமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு அது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் கொழும்பு வணிக நீதிமன்றத்தில் சிவில் வழக்கும் இது தொடர்பாக விசாரணையில் காணப்படுகின்றது. | |
| (உ) | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக கொள்வனவாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,574,811 தொகை பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் அடிப்படையில் அரிசியினைப் பெற்றிருந்தமை கொள்வனவாளர்களினால் | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக டபிள்யூ..ஆர். விஜித்த என்பருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வெளிப்படுத்தல் | -மேற்படி- |

| | |
|---|---|
| நிராகரிக்கப்பட்டதன் காரணமாக அது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு தாபனத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | பெறப்பட்டுள்ளது. மேலும் டபிள்யூ.ஆர். விஜித்த என்பவருக்கு உரிய அரிசி விற்பனை மற்றும் பணப் பெறுவனவு தொடர்பாக முழுமையான கணக்காய்வு மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளதுடன் அதன் பிரகாரம் சுயாதீன கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் இதுவரை முடிவடைந்திருக்கவில்லை. |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) | நிதிப் பிரமாணம் 103(1)(ஆ), 104(1), 104(3) மற்றும் 104(4) | தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள பொருட் போக்குவரத்து சேவைக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வருமானத்தில் போக்குவரத்தின் போது ஏற்பட்டிருந்த ரூபா | லங்கா சதொச நிறுவனத்தில் பொருள் இருப்பு போக்குவரத்து சேவைக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வருமானத்தில் போக்குவரத்தின் போது ஏற்பட்டிருந்த | காண்பிக்கப்பட்டுள்ள நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 18,819,050 வழியில் ஏற்பட்ட குறைவுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | வழியில் குறைவு தொடர்பாக அந்த நிறுவனம் சதொச நிறுவனத்திற்கு அறிவித்திருந்ததுடன் குறைவு அறிக்கையிடப்படுகின்ற லொறி வண்டி தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அதற்கு பொறுப்பான ஊழியரிடமிருந்து 2019 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 756 | தாபனம் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு செய்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் தாபனத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) கூட்டுறவு சங்கங்களின் தேவையான பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்<br><br>(ii) சகல முறையிலும் பொருட்கள் | பதிலளிக்கப்படவில்லை. | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக ஏற்றுமதியாளருக்கு, இறக்குமதியாளருக்கு, மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளுக்காக நடவடிக்கை எடுத்தல்.<br><br>(iii) உரிய அமைச்சர் மற்றும் நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் அல்லது வங்கி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஏனைய வர்த்தக அல்லது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்காக தாபனத்தால் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படாதிருந்த போதும் வரைவு செய்யப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டம் தயாரித்து பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவில் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 69,742,863 தொகை, ரூபா 72,409,444 தொகை, ரூபா 50,018,838 தொகை, ரூபா 75,143,787 ஆக நட்டம் அறிக்கையிடப்பட்டமையால் தொடர்ச்சியாக நட்டம் பெறுகின்றமை | பதிலளிக்கப்படவில்லை. | நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | தாபனத்தால் 2022 ஒக்டோபர் மாதத்தின் போது ரூபா 20,000,000 செலவில் ஆரம்பிக்கப்பட்ட கிறீன் சுப்பர் விற்பனைக் கடை ஒக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது முறையே ரூபா 828,518 தொகை, ரூபா 810,382 மற்றும் ரூபா 703,105 ஆக தொடர்ச்சியாக நட்டம் பெற்றிருந்தமையும் நிர்வாக செலவினம் விற்பனை வருமானத்தை விஞ்சியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வியாபார நடவடிக்கைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தாபனத்திற்குச் சொந்தமாக 98 வாகனங்கள் காணப்பட்டதுடன் அதில் 11 லொறி வண்டிகள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு 03 வருடகாலம் முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த வாகனங்கள் 2023 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் கேள்விக் குழு நியமிக்கப்பட்டு கைதவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | தாபனத்திற்குச் சொந்தமான ஹிங்கரங்கொட மற்றம் பண்னேகமுவ அசிரி தயாரிக்கும் தொகுதி 18 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் இருந்து குறைவாகப் பயன்படுத்தப்படுவதுடன் அரிசிக் கட்டிடத் தொகுதி இரண்டிலும் மணித்தியாலம் ஒன்றிற்கு அரிசி கிலோ கிராம் 2000 வீதம் தயாரிக்கும் இயலளவு | இந்த கட்டிடத் தொகுதி இரண்டிற்குமாக நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து நெல் இருப்பு வழங்கப்படுவதுடன் அவர்கள் கைக்காசுக்கு மாத்திரம் நெல் இருப்புக்களை விநியோகித்தலை மேற்கொள்கின்றனர். அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றது. எனினும் மீளாய்வாண்டின் போது உரிய அரிசி கட்டிடத் தொகுதி இரண்டிலும் எந்தவொரு அரிசி உற்பத்தியும் மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதற்கு இணைந்ததாக உள்ள 04 களஞ்சியங்களும் பயனற்றுக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது அரிசி தயாரிக்கும் தொகுதி இரண்டிலும் ஊழியர்களின் எண்ணிக்கை 03 முதல் 12 வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சம்பளம், மேலதிக நேரப்படி மற்றும் படிகளை உள்ளடக்கிய ஊழியர் கிரயம் ரூபா 10,592,296 ஆக காணப்பட்டது. | சொந்தமாகக் காணப்பட்ட நெல் மொத்த இருப்பு வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அந்த இருப்பு சதொசவிற்கும், தனியார் பிரிவிற்கும் ஒரே தடவையில் விநியோகிக்கப்படுகின்றது. அதன் போது சதொஷவிற்கு அந்தக் காலத்தில் பெறக்கூடியதாக இருந்த வரையறுக்கப்பட்ட நெல் இருப்பு அளவு மாத்திரம் குத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் அரிசி தயாரிக்கும் தொகுதிக்கு நியமிக்கப்பட்ட ஊழியர்கள் அரிசி தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக பயிற்சி ஊழியர்களாக இருந்தமையால் அவர்கள் ஏனைய பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தமையும் அந்தக் களஞ்சியங்கள் பயனற்று காணப்பட்டமையால் அந்தக் களஞ்சியங்களின் பராமரிப்பு, அரிசி தயாரிக்கும் இயந்திரங்களைச் சுத்திகரித்தல், நிலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | |
| (இ) | மீளாய்வாண்டில் தாபனத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்கிடையே வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்ட சதுர அடி 218,187 அளவாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாடகையின் பிரகாரம் இந்தக் கட்டிடம் | சதொச மீள்கட்டமைப்பதற்காக திட்டமிடப்பட்டதன் காரணமாக தற்காலிகமாக வாடகைக்கு வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக மீண்டும் வரிசை அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் விளைவற்ற ஆதனங்களை வாடகையில் அடிப்படையில் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| விளைவற்றுக் காணப்பட்டமையால் வருடாந்தம் ரூபா 35,015,743 வருமானம் தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது தாபனத்திற்குச் சொந்தமான 13 களஞ்சியங்களை நவீனமயப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நவீனமயப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தாபனத்தால் ரூபா 82,525,632 செலவிடப்பட்டிருந்தது. அமைச்சினால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 62,490,367 செலவினம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அந்த சகல நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளும் 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு வரையிலும் 09 களஞ்சியங்கள் மாத்திரம் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருந்தது. அமைச்சினால் மிகுதி தொகை தாபனத்திற்கு மீளளிப்புச் செய்யப்படாதிருந்ததுடன் அந்த பணம் அமைச்சினால் 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி பொதுத் திறைசேரிக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | பாதீட்டு நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்டகாலம் எடுத்தமையின் காரணமாக ஒப்பந்தப் பட்டியல் செலுத்துதல் தாமதமடைந்தமை, சந்தையில் பொருட்கள் விலைகள் உயர்வடைந்து சென்றமையால் விலை திருத்தம் ஒன்று கோரப்பட்டமையால் ஒப்பந்தகாரர்களின் வேலை தாமதமடைந்தமை, கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக செயற்திட்டம் தாமதமடைந்தமை போன்றவையாக நிறுவனத்திற்கு கட்டுப்படுத்த முடியாத தாக்கங்களின் கீழ் 2022 ஆம் ஆண்டு வரையில் 13 களஞ்சியங்களில் 09 களஞ்சியங்களின் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்டுள்ள பணிகளை குறித்துரைத்த காலத்தில் நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தாபனத்தால் வருடாந்த வாடகை வருமானம் ரூபா 85,730,344 ஆன 71,464 சதுர அடி ஆதனம் 2022 ஆம் ஆண்டின் போது எழுத்து மூல உடன்படிக்கைகள் கைச்சாத்திடாமல் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வாடகை ஆதனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் வெளித் தரப்பினருக்கு கட்டிடத்தை வாடகைக்கு வழங்கும் போது நிறுவனம் வாடகைக்கு பெற்ற அடிப்படை, வாடகை, வருட எண்ணிக்கை, வைப்புப் பணம் போன்ற யாவற்றினதும் அங்கீகாரம் சேவை பிரிவினால் பெறப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் சட்டப்பிரிவிற்கு உரிய அங்கீகாரத்துடன் உடன்படிக்கை தயாரிப்பதற்காக தேவையான தகவல்கள் அனுப்பப்படுகின்றது. உரிய ஆண்டிற்கான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக சட்டப்பிரிவிற்கு அனுப்பப்படாதிருந்ததாகவும் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையால் அவ்வாறு அனுப்பப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு முதல் இந்த இரண்டு பிரிவுகளும் ஒரு உத்தியோகத்தரின் கீழ் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்று நிபந்தனையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |
| (இ) | எழுத்து மூல உடன்படிக்கையில் உள்ளடக்காமையின் காரணமாக லங்கா சதொச நிறுவனத்தால் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட வாடகைப் பெறுமதியினை விட குறைவாக செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டிற்காக தற்போது சகல உடன்படிக்கைகளும் கையொப்பமிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் தாபனத்திற்கு 2022 ஆம் ஆண்டின் போது இழக்கப்பட்ட வருமானம் ரூபா 29,299,695 ஆக இருந்தது. | | |
| (ஊ) | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விலைகளை விட குறைவாக சதுர அடியொன்றின் விலையை தீர்மானித்ததன் காரணமாக வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களில் இருந்து மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 33,973,380 ஆக காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்குவதற்கு குறித்த ஆதனங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சில களஞ்சியங்கள் மற்றும் ஆதனங்கள் சதொச நிறுவனத்தின் சகோதர கம்பனியான லங்கா சதொச நிறுவனத்திற்கும், சதொச நிறுவனத்தின் துணைக் கம்பனிக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆதனங்கள் மதிப்பீட்டு விலையினை விட குறைவான விலையில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (உ) | உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைக்கு பெற்றவர்களினால் வாடகை உரிய மாதத்தின் 10 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செலுத்துதல் 10 நாட்கள் தாமதப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் வாடகைப் பணத்திற்காக மேலதிகமாக 10 சதவீத தாமதக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். எனினும் தாபனத்தால் உடன்படிக்கைக்கு கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாகவும், கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் | 2023 ஆம் ஆண்டிற்காக குறித்துரைத்த திகதியில் உள்ளவாறான வாடகைப் பணம் செலுத்தா திருக்குமாயின் 10 சதவீத நட்டத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாகவும் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 16,272,734 தாமதக் கட்டண வருமானம் தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ஹிங்குரக்கொட அரிசி கட்டிடத் தொகுதியில் நெல் அவித்து உலரவைக்கும் பிரிவில் கிலோ கிராம் 41,860 நிறையான இயந்திரப் பகுதி 2021 திசெம்பர் 30 ஆந் திகதி முதல் 2022 சனவரி 26 வரையான காலத்தில் உரிய வரிசை அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 4,813,900 தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் இயந்திரக் கூடத்தில் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி ரூபா 10,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் பெற வேண்டி இருந்தமைக்கு பணிப்பாளர் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வடமத்திய மாகாண அலுவலகத்தால் இயந்திரக் கூடத்தில் கழற்றி அகற்றப்பட வேண்டிய உபகரணங்களின் நிறை அளவு தனித்தனியாக காண்பித்து அனுப்புமாறு அறிக்கப் பட்டிருந்தது. அவ்வாறு தனித்தனியாக நிறை அளவு காண்பித்து அனுப்பப்படுமாயின் இயந்திரக் கூடத்தின் பகுதிகளை கழற்றி அகற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்காக தாபனத்திற்குச் சொந்தமாக தொழில்நுட்பம் இல்லாமை மற்றும் பிரயோக ரீதியில் அவ்வாறு மேற்கொள்ள முடியாமையினால் தனித்தனியாக நிறையினை நிறுத்து மதிப்பிட்டு அலுவலகத்திற்கு அறிவிப்பதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆதனங்களை விற்பனை செய்யும் போது அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மேற்கூறப்பட்ட விற்பனைக்குரிய 2021 திசெம்பர் 08 ஆம் திகதிய பெறுகைக் குழு அறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறித்துரைத்த பிரகாரம் | முன்னாள் தலைவரால் திணைக்கள பெறுகைகள் குழுவின் தீர்மானத்தைக் கவனத்திற் கொள்ளாமல் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்ற முடியாதிருந்ததாக தமது விருப்பத்தின் பிரகாரம் குறிப்பிட்டிருந்தமையால் | பெறுகைக் குழு பரிந்துரையினை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரும்பு இருப்பின் நிறை மற்றும் நியமங்கள் மதிப்பிடப்பட்டு விரிவான அறிக்கையொன்று, பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இரும்புகளின் அளவு விற்பனை செய்யப்பட்டமைக்கு அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர் உறுதிப்படுத்தி கிடைத்த அறிக்கையொன்றுடன் உடைந்த பொருட்களை விற்பனை செய்வதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்று மீண்டும் பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிப்பித்தல் என்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தமை உரிய நபரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவர் தொடர்பாக விசாரணை ஒன்றை நடாத்துவதற்கு மூன்று நபர்கள் கொண்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | 2021 ஒக்டோபர் 13 ஆம் திகதிய CWE/DPC/2021(09)/02 (i), (ii) மற்றும் (iii) என்ற கடிதம் மூலம் செயற்பாட்டு முகாமையாளர் (போக்குவரத்து) பிரதேச மேற்பார்வையாளர் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆலோசகர் பதவிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு கழற்றி அகற்றுவதற்கு குறித்துரைத்த இரும்பு அளவு தொடர்பாக களப் பரிசோதனையொன்று மேற்கொண்டு மதிப்பீடொன்றைச் சமர்ப்பிக்குமாறு தாபனத்தின் தலைவர் அறிவித்திருந்த போதிலும் விற்பனை செய்யப்பட்ட இரும்பு தொடர்பாக மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தமைக்கான சான்றுகள் | வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை கோவையின் பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை. | ஆதனங்களை விற்பனை செய்வதற்கு முன் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

காணப்படாதிருந்ததுடன் பெறுகை நடைமுறைகளில் கொள்வனவாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளுக்கிடையே தெரிவுசெய்யப்பட்ட கொள்வனவாளர்களுக்கு அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலையில் இரும்பு பகுதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 3.4 அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பழுதுபார்த்தலை மேற்கொண்டதன் பின்னர் உரிய வாகனங்களுக்காக பெறப்பட்ட உதிரிப் பாகங்கள் வாகனங்களுக்கு பொருத்தப்பட்டமையும் வாகனத்தின் பழுதுபார்த்தல்கள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கும் வேலை ஆரம்ப அல்லது பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உரிய பழுதுபார்த்தல் கட்டளைப் பத்திரத்தில் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் பரிசோதனை செய்யப்பட்ட 100 கட்டளைப் பத்திரங்களில் தெரிவாக ரூபா 3,814,451 ஆன பழுதுபார்த்தல் செலவினங்களுக்குரிய எந்தவொரு கட்டளைப் பத்திரமும் அவ்வாறான சான்றுப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | உரிய வாகனங்களுக்காக பெறப்பட்ட உதிரிப்பாகங்கள் வாகனங்களுக்கு பொருத்தப்பட்டமைக்கும் வாகனத்தின் பழுதுபார்த்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்மைக் கும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | போக்குவரத்து பிரிவிற்கு அனுப்பப்பட்ட வாகனம் பழுதுபார்ப்பதற்காக தேவையான உதிரிப்பாகங்கள் போக்குவரத்து முகாமையாளரின் | பதிலளிக்கப்பட வில்லை. | வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக தேவையான உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| அங்கீகாரத்தின் கீழ் களஞ்சியக் கட்டுப்பாட்டாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையான 12 மாதங்களுக்குரிய சகல பொருட்களினதும் கோரிக்கை மற்றும் கையேற்றல் பத்திரங்களில் போக்குவரத்து முகாமையாளரால் கையொப்பம் இடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | போக்குவரத்து முகாமையாளரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

**3.5 பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினரில் 365 பதவிகள் உள்ளடங்கியிருந்ததுடன் உள்ளபடியான பதவி அணியினர் 292 ஆகும். முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 37 அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் உள்ளபடியான பதவியணியினர் 18 ஆகும். அலுவலக உதவியாளரில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 120 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவி அணியினர் 103 ஆகும். முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை போதியளவில் இல்லாமையின் காரணமாக முக்கியமான நிர்வாக ரீதியான மற்றும் நிதி ரீதியான விடயங்களில் அலுவலக உதவியாளர் பதவியில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்களால் மேவுகை செய்யப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | முக்கியமான நிர்வாக ரீதியான மற்றும் நிதி ரீதியான விடயங்கள் தகைமை பெற்ற உத்தியோகத்தரின் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |